பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 06 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியா-நேபாள நாடுகள் வலுவான கலாச்சார நட்புறவைக் கொண்டுள்ளது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. உலக உணவுப் பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

4. இந்தியா மீது பொருளாதார தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகள் அந்நாட்டின் இறையாண்மைக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

5. தைபேயில் நடைபெற்ற உலக தடகள போட்டியில் மகளிர் 400 மீட்டர் ஓட்டத்தில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் நிலவி வரும் பொருளாதார நிச்சயமற்ற சூழலில் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் உத்வேகம் பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா-நேபாளம் இடையேயான எல்லைப் பகுதியில் பாதுகாப்பு பணிகளை இணைந்து மேற்கொள்வதென இரு நாடுகளும் முடிவு செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு. சிஷிர் கனாலுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இதுகுறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளும் வலுவான கலாச்சார மற்றும் பாரம்பரிய உறவுகளைக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேபாள அரசு மேற்கொண்டு வரும் பயனுள்ள திட்டங்களுக்கு இந்தியா ஆதரவளிக்கும் என்று அவர் கூறினார்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, கல்வி, பேரிடர் மீட்பு, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புள்ளதாக திரு. ஜெய்சங்கர் கூறினார்.

இதனையடுத்து கடந்த **2015**ம் ஆண்டு நேபாளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது பாதிக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டு வரும் **12** கலாச்சார பாரம்பரிய மையங்கள் மற்றும் **72** சுகாதார மையங்கள் அந்நாட்டிடம் ஒப்படைக்கப்பட்டன.

<<<<>>>>

ஆசிய-பசிபிக் பகுதியில் இந்திய விமானப் போக்குவரத்து சேவை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சிகண்டு வருவதாக சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

பிரேசிலில் நடைபெற்று வரும் உலக விமானப் போக்குவரத்து சேவை குறித்த மாநாட்டில் உரையாற்றிய சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் மண்டல துணைத்தலைவர் திரு. **Sheldon Hee** இதனைத் தெரிவித்தார்.

வரும் **2044**ஆம் ஆண்டுக்குள் இந்திய விமானப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமான அளவில் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலக அளவில் உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் இந்தியா விரைவான வளர்ச்சி கண்டு வருவதாக திரு. **Sheldon Hee** குறிப்பிட்டார்.

<<<<>>>>

இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவு மறுதேர்வுக்கான வினாத்தாள் வெளியானதாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகளை தேசிய தேர்வு முகமை நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக தேர்வு முகமை வெளியிட்டுள்ள வலைதள பதிவில், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பதற்றத்தை

ஏற்படுத்து நோக்கில், இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளிப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் மறுதேர்வை முறையாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்வு முகமை கூறியுள்ளது.

தவறான செய்திகளை வெளியிடும் வலைத்தளங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சைபர் குற்றவியல் அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை தெளிவுபடுத்தியுள்ளது .

தேர்வு எழுதும் மாணவர்கள் இது போன்ற போலியான செய்திகளை நம்ப வேண்டாம் என்றும், தேர்வு முகமையின் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும் என்றும் தேர்வு முகமை கேட்டுக் கொண்டுள்ளது.

<<<<>>>>

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழிகாட்டுதலின்படி வளர்ச்சித் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டியதன்

அவசியத்தை மத்திய உணவுப் பதப்படுத்துதல் துறை அமைச்சர் திரு. சிராக் பஸ்வான் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலம் கனிகிரியில், அரசியல் சாசன சிற்பி டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் திருவுருவ வெண்கலச் சிலையை திறந் வைத்தார்.

இதையடுத்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், அம்பேத்கரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு தலைமுறை தலைமுறையாக தலைவர்கள் உருவாகி வருவதை சுட்டிக்காட்டினார்.

அம்பேத்கரின் போதனைகளை மனதில் உள்வாங்கிக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு அம்மாநில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன் உறுப்பினர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

<<<<>>>>

உலக உணவுப் பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உணவுப் பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் 7-ம் தேதி இந்த தினம்

கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இத்தின்தையொட்டி தருமபுரியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறுதானிய பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அம்மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார் வலியுறுத்தியுள்ளார்.

**(Voice Byte — Dr. Kailash Kumar — 35 Sec)**

<<<<>>>>

இந்தியா மீது பொருளாதார தடை விதிப்பது போன்ற அச்சுறுத்தும் நடவடிக்கைகள் அந்நாட்டின் இறையாண்மைக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் தெரிவித்துள்ளார்.

செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்று வரும் சர்வதேச பொருளாதார மன்றத்தின் கூட்டத்திற்கு இடையே செய்தி நிறுவனத்திற்று பேட்டியளித்த அவர், நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு சுதந்திரமாக முடிவெடுக்கும் உரிமை இந்தியாவிற்கு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா-ரஷ்யா இடையேயான உறவுகள் பரஸ்பரம் நம்பிக்கை அடிப்படையிலானது என்றும், இரு நாடுகளுக்கும் இடையேயான

வர்த்தகம் மேலும் விரிவடையும் என்றும் திரு. விளாடிமிர் புதின் கூறியுள்ளார்.

<<<<>>>>

குவைத் மற்றும் பஹ்ரைனில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகளைக் குறிவைத்து ஏவுகணை மூலம் ஈரான் நேற்று நடத்திய தாக்குதல் காரணமாக அப்பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணை அருகே உள்ள தீவுகளில் அமைக்கப்பட்டுள்ள ரேடார் கண்காணிப்பு கருவிகள் மற்றும் ஈரான் கடலோர கண்காணிப்பு நிலைகளை குறிவைத்து அமெரிக்கா நடத்திய தாக்குதலையடுத்து, இந்த ஏவுகணை தாக்குதலை ஈரான் மேற்கொண்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை கூறியுள்ளது.

ஈரானின் ஏவுகணைத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும், எனினும் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தரவுகள் எதுவும் இல்லை என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்காசிய பகுதியில் பதற்றத்தை குறைப்பது குறித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இத்தகைய ராணுவ

நடவடிக்கைகள் அப்பகுதியில் பதற்றத்தை மேலும் அதிகரித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குறைந்த செலவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில், வளங்கள் பாதுகாப்பு குறித்த காமன்வெல்த் நாடாளுமன்ற சங்க மாநாடு நடைபெறவுள்ளதாக ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தலைவர் திரு ஹர்விந்தர் கல்யாண் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாடு இம்மாதம் 8 முதல் 10 வரை, மூன்று நாட்களுக்கு சண்டிகரில் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்கும் பிரதிநிதிகளின் போக்குவரத்துக்காக 6 மின்சாரப் பேருந்துகளை பயன்படுத்த ஹரியானா மாநில அரசு முடிவு செய்துள்ளது.

எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பது, போக்குவரத்துக்கான செலவுகளைக் கட்டுப்படுத்துவது போன்ற முக்கிய முன்முயற்சிகள் குறித்த இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தைபே ஓபன் தடகளப் போட்டியில் மகளிர் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்தியா தங்கப்பதக்கம் வென்று புதிய சாதனை படைத்துள்ளது.

-----------------

Ulaanbaatar ஓபன் மல்யுத்தப் போட்டியில் நேற்று இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

மங்கோலியாவின் Ulaanbaatar நகரில் நேற்று நடைபெற்ற ஆடவர் 74 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Sagar Jaglan தங்கப் பதக்கம் வென்றார்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Kajal Dhochak தங்கப் பதக்கம் வென்றார்.

இதே எடைப்பிரிவில் Piriya malik-க்கும், 55 கிலோ எடைப்பிரிவில் Hansika Lamba-வும், 62 கிலோ எடைப்பிரிவில், Mansi Ajlawat-ம் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

<<<<The End>>>>